# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.3453/C/2024

திரு வி. ராஜகோபால் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தொழிலாளர் உதவி ஆய்வாளர்,
சங்ககிரி, சேலம் மாவட்டம் - 637 303. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 17.12.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 24.01.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 06.03.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு வி. ராஜகோபால் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7(2)-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு இரா. சுதாகர், தொழிலாளர் உதவி ஆய்வாளர், சங்ககிரி, சேலம் மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்டம், சங்ககிரி தொழிலாளர் உதவி ஆணையரக அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், நாமக்கல், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்திற்கு கடந்த 09.06.2023 தேதியிட்டு அனுப்பப்பட்ட தனது புகார் மனுவில், 66 உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களின் மீது புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரம், பொதுத் தகவல் அலுவலரது ஆட்சி எல்லையில் அமைந்துள்ள நிறுவனங்களின் பெயர் மற்றும் முழு

முகவரி பற்றிய விவரம், சங்ககிரி, தொழிலாளர் உதவி ஆய்வாளரின் பொதுத் தகவல் அலுவலரின் கடித எண்.ந.க.561/2023 நாள் 16.08.2023 தேதியிட்டு குறிப்பிடப்பட்டுள்ள உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களை எந்தெந்த நாட்களில், எந்தெந்த நேரங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றிய விவரம் மற்றும் அது தொடர்பான அறிக்கையின் நகல் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 7 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.784/2023 நாள் 18.01.2024 மற்றும் ந.க.எண்.784/2023 நாள் 23.01.2024 ஆகிய தேதிகளிட்டு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர், இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகி அவரது கருத்தினை எடுத்துரைக்கத் தவறியுள்ளார். எனவே, பொதுத் தகவல் அலுவலரால், மனுதாரருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதி, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.3453/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தொழிலாளர் உதவி ஆய்வாளர்,
சங்ககிரி, சேலம் மாவட்டம் - 637 303.

**<u>வழக்கு எண்.SA.3453/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு வி. ராஜகோபால்,
எண்.22/27, புதிய எண்.36, நேருஜி வீதி,
ப்ரிக்கால் காலனி, கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் - 641 030.

Copy to: File
SNPS / 10.04.2026